**கவனிக்க.-** 2018.01.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி பகுதி II மற்றும் IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2055 - 2018 ජනවාරි මස 19 වැනි සිකුරාදා - 2018.01.19
2055 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1858 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) தீவிரப் பொறுப்பு முகாமை சட்டமூலம் 2018 சனவரி மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, சனவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

47- B81245 - 5,403 (2018/01)

## 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுக் கல்லறைகள் மற்றும் தனியார் கல்லறைகள் பற்றிய கட்டளைச் சட்டம்

II அத்தியாயத்தில் 5(1) கீழ் செய்யப்படும் அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் II ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது கல்லறைகள் மற்றும் தனியார் கல்லறைகள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தில் 5(1) ஆம் பிரிவினால் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய, அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சின் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சராகிய தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க ஆகிய என்னால் வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லறையில் இறந்த உடல்களை புதைத்தல் அல்லது தகனம் செய்வதற்காக பொது கல்லறையாக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க
முதியன்சேலாகே தர்மசிறி தசாநாயக்க,
முதலமைச்சரும் நிதி திட்டமிடல்,பொறியியல் சேவை, நீதியும்
சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மன்றம்,
மாகாண நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல்
நடவடிக்கை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு
சுற்றுலா நடவடிக்கை அமைச்சரும்,
வடமேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சு அலுவலகம்,
குருநாகல்,
2017, நவெம்பர் 09.

### அட்டவணை

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதீகம பிரதேச சபை அதிகாரப் பிரிவில் இலக்கம் 623, வெலகெதர கிராம அலுவலர் பிரிவில் செகரிலியவத்த கிராமத்தில் அமைந்துள்ள 03 றூட் , 39.7 பர்ச்சஸ் அளவுடைய வடக்கிற்கு ஈவீபி செகேலென கிராம எல்லையும், கிழக்கிற்கு செகேலென மற்றும் கோணதெனிய பாதை பாதுகாப்பு பிரதேசமும் தெற்கிற்கு துண்டு இல. 12 உம், மேற்கிற்கு துண்டு இல. 31, 34 மற்றும் 25 ஆகிய பகுதிகளினால் எல்லைகளைக் கொண்ட செகரலியவத்த கல்லறையுடனான காணி.

1 - 438